28th July 1962]

Expanded nutritional programme

* 741 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to implement an expanded nutritional programme with UNICEF aid; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) A statement [a] is placed on the table of the House.

திரு. வை. சங்கரன் : எந்த அடிப்படையிலே இந்த இடங்கள் எல்லாம் தேர்ந்தெடுக்கப்படுகின்றன? இப்போது எந்த திட்ட முறையிலே இது விஸ்தரிக்கப்படும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சில வட்டாரங்களிலே மட்டும் இதை நிறைவேற்ற வேண்டுமென்பது அல்ல. இது நிறைவேற்றப் பட்டு, இதன் பலனைப் பார்த்தபிறகு, மற்ற இடங்களுக்கும் இது விஸ்தரிக்கப்படும்.

Manufacture of drugs

* 742 Q.—SRI N. P. SENGOTTUVELU : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to start a factory for manufacturing medicines at Yercaud in Salem district ?

THE HON. SRI R. VENKATARAMAN : Government have no proposal to set up an industrial undertaking at Yarcaud for the manufacture of drugs. As regards the private sector, Government are not aware of any such proposal.

எண்ணெவள ஆராய்ச்சி

* 743 கேள்வி.— திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1962-ல் இம் மாநிலத்தில் புதிதாக எண்ணெவளம் எங் கெங்கே இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது ?

(இ) எந்த நாட்டு நிபுணர்கள் கண்டுபிடித்துள்ளார்கள் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ)The Oil and Natural Gas Commission is in charge of oil investigation in this State and no occurrence of oil has been reported to this Government during the year 1962.

(இ)Does not arise.

திரு. கே. மூக்கையா தேவர் : ஸார், ராமநாதபுரம் ஜில்லாவிலே காரைக்குடிக்குப் பக்கத்தில் மண்ணெண்ணெய் கிடைப்பதாகச் சொல்லப்படுகின்றதே, அதைப்பற்றி ஏதாவது ஆராய்ச்சி செய்யப்படுமா ? அதைப்பற்றி ஏதாவது ரிப்போர்ட் அரசாங்கத் திற்கு கிடைத்ததா ?

---

[a] Printed as Appendix II on pages 725–742.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதுபற்றி எந்த மாதிரியான ரிப்போர்ட்டும் கிடையாது. ஜியலாஜிகல் சர்வேயிலிருந்து எந்த மாதிரியான ரிப்போர்ட்டும் சர்க்காருக்கு வரவில்லை.

அரசினர் விருந்தினர் விடுதி

* 744 கேள்வி.—திரு. மு. பொ. வடிவேல் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசினர் விருந்தினர் விடுதியின் சென்ற ஆண்டின் செலவுகள் எவ்வளவு ?

(இ) செலவின் விளக்கம் சபைக்கு அறிவிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (அ) The expenditure incurred in the State Guest House during 1961-62 is Rs. 48,041.62 nP.

(இ) A statement[a] is placed on the table of the House.

Mica (Kanyakumari district)

* 745 Q.—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there are any Mica deposits in the Vilavancode taluk in the Kanyakumari district?

THE HON. SRI R. VENKATARAMAN : Yes, Sir. Mica is reported to occur in the following places in Vilavancode taluk of Kanyakumari district :—

1. Appiodu ;
2. Nattalam ; and
3. Midalakulam.

Further investigation of these deposits is in progress.

திரு. கே. மூக்கையா தேவர் : சார், மதுரைக்குப் பக்கத்திலுள்ள போடிநாயக்கனூரிலே மைக்கா கிடைப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

இலவசப் படிப்பு

* 746 கேள்வி.—திரு. புலவர் கா. கோவிந்தன் : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பத்தாவது வகுப்புவரை இலவசப் படிப்பு என்ற திட்டம் முற்பட்ட வகுப்பினர், பிற்பட்ட வகுப்பினர், செல்வர், வறியோர் ஆகிய அனைவருக்குமே கொடுக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : During 1961-62, full tution fee concession was extended to all poor pupils studying in classes up to and inclusive of X Standard irrespective of caste or community provided the gross annual income of their parents or

---

[a] Printed as Appendix III on 743.